தனியார் நடத்தும் ஆம்னி பஸ்களை தடைசெய்யும் திட்டம்.

* வினா எண். 57—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டாபிராமன் குழு பரிந்துரை செய்த அடிப்படையில் தனியார் நடத்தும் ஆம்னி பஸ்ககளுக்கு தடை விதிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாபிராமன் குழு பரிந்துரையை பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையில், பல்வேறு இடங்களில் டூரிஸ்ட் என்று போர்டு போட்டுக் கொண்டு இயங்கிக் கொண்டு வருகிறார்கள். வருகின்றவர்கள் ஒவ்வொருவரையும் நம்முடைய பஸ்களில் ஏற்றுவது போல்தான் ஏற்றிக்கொள்கிறார்கள். அதன் காரணமாக, நம் பஸ்களில் வருமானம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் அதைத் தடுப்பதற்கு உடனடியாக தடை செய்யும் வகையில் சட்டம் பிறப்பிப்பதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகள் எடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சட்டப்படி அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சரியான சட்டங்கள் நம்மிடம் இல்லை. அப்படி தடுத்து நிறுத்தியபோது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, அதற்கு விதிவிலக்கு வாங்கி விட்டார்கள். இருந்தாலும் கூட, நம்முடைய போக்குவரத்து அதிகாரிகளும், காவல்துறை அதிகாரிகளும் கொஞ்சம் கண்காணிப்புடன் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல. போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அவர்கள் வண்டிகளை ஓட்டக்கூடிய நேரங்களில், இவர்களும் வண்டிகளை ஓட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து, இப்போது கொஞ்சம் குறைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் தமிழக அரசு சில இடங்களில் இப்படிப்பட்ட வண்டிகள் ஓடுவதை நிறுத்தியதன் காரணமாக, சில நாட்களுக்கு இந்த வண்டிகள் ஓடுவது நிறுத்தப்பட்டது. அப்போது, காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மற்றும் சில அதிகாரிகளும் சஸ்பென்ட் செய்யப்பட்டனர். அந்த அதிகாரிகள் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டதற்கான

1981 ஆகஸ்ட் 25] [திரு என். எஸ்.வி. சித்தன்]

காரணம் என்ன? மேலும், அந்த ஆம்னி பஸ்கள் விடுவதை நிறுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அப்படி பிடிப்பட்ட பேருந்துகள் மீது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னபோது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்தில் அவர்களைப் பாதுகாக்கின்ற அளவிலே சட்டங்கள் இருந்த காரணத்தினால், பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளதைப் பற்றிச் சொன்னார்கள். வேலைநீக்கம் செய்யப் பட்ட அதிகாரிகளை 6 மாத காலங்களுக்கு மேல் வேலைநீக்கம் செய்யக்கூடாது என்பதால் அவர்களை வேலையில் எடுத்துக் கொண்டு, விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது. விசாரணை தொடர்ந்து நடந்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : அவர்களுக்கு பர்மிட் வழங்கும்போது டூரிஸ்ட் பஸ் என்ற முறையில்தான் கொடுக்கப் படுகிறது. டூரிஸ்ட் என்று சொல்லும்போது குறிப்பிட்ட ஆட்கள் பூராவையும் ஒரே இடத்திற்கு அழைத்துச் செல்வதாக இருக்க வேண்டும். ஆனால் இந்த பஸ்ஸில் குறிப்பிட்ட நகரத்தில் நின்று திருச்சி, மதுரை போன்ற எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்கிறார்கள். அப்படி அவர்கள் ரூல்சுக்கு விரோதமாகப் போகும்போது அவர்களுடைய பர்மிட்டை பறி முதல் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதைத் தெரிந்துதான் முதலிலேயே சொன்னேன். பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கும்போது அவர்களுக்கு நீதிமன்றத்தின் பாதுகாப்பு கிடைக்கிறது. வேறு வகையில் இதை எப்படி செய்வது என்று யோசித்து அதிகாரிகளை நியமித்து கடுமையாக கண்காணித்து வருகிறோம். இதிலே வேறு வகையான மாற்றங்கள் செய்ய அரசு முன்வரும்.

திரு. அ. ரகுமான்கான் : ஆம்னி பஸ்ஸில் ஊழல் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகள் மீது வழக்குகள் போடப் பட்டதா? சார்ஜ் ஷீட் போடப்பட்டதா? நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் அளவுக்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா அல்லது சார்ஜ் ஷீட் போடாமல் எஃப்.ஐ.ஆர். ஸ்டேஜில் இருக்கிறதா? வழக்குகளைத் திரும்பப் பெறும் உத்தேசம் இருக்கிறதா? சாதாரணமாக மற்ற வழக்குகளில் கடுமையாக இருந்து கோர்ட்டுக்குக் கொண்டு போகக்கூடிய இந்தச் சர்க்கார் இதில் காலதாமதம் செய்து கொண்டிருப்பதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இந்த அதிகாரிகளைப் பொறுத்த வரை குற்றம் செய்தவர்கள் என்று சொல்லப்பட்டவர்களை

மூன்று பிரிவாகப் பிரித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது விசாரணையில் இருக்கிறது. வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று விளக்கமாகப் பதில் சொல்ல முடியும்.

திரு. மி. வின்செண்ட் : தனியார் பஸ்களை தேசவுடைமையாக்குவது பற்றி அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்த அரசைப் பொறுத்தவரை தனியாருடைய பேருந்துகளை தேசியமயமாக்க வேண்டுமென்று கருதினாலும் இன்றைய தினம் இருக்கும் சூழ்நிலையில் எங்கு பார்த்தாலும் பேருந்து வேண்டுமென்று கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்ற நிலையில் ஆண்டுதோறும் 1,500 பேருந்துகள் வாங்கினாலும் மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்ற அச்சம் இருக்கும் நிலையில் இப்போதுள்ள தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு படிப்படியாக தனியார்களுடைய பேருந்துகளை அரசுக்குச் சொந்தமாக்கலாம் என்ற கருத்தில் இந்த அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழகங்களுக்கான பயணச்சீட்டுகளை அச்சடிக்கும் பணி.

*வினா எண். 58—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசை சேர்ந்த போக்குவரத்துக்கழகங்கள் பயணச்சீட்டுகளை தனியார் அச்சகங்களில் அச்சிடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) பல்லவன் போக்குவரத்துக்கழகம் (பெருநகர்) பிரிவுக்குத் தேவையான பயணச்சீட்டுகளின் ஒரு பகுதியும், மற்ற போக்குவரத்துக் கழகங்களில் தேவையான பயணச் சீட்டுகளும் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன.

தற்பொழுது பயணச் சீட்டுகளை அச்சடிக்கும் பணி, நன்கு பெயர் வாங்கிய அச்சகங்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகின்றன. இந்த முறை போக்குவரத்துக் கழகங்களுக்கும், பயணம் செய்பவர்களுக்கும் திருப்தி அளிக்கும் வகையில் செயல்படுகிறது. ஆகையால் தற்போது இந்த முறையில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

TRUTH ALONE TRIUMPHS